III யோவான் - முன்னுரை

காலமும் இடமும்

யோவான் இந்த நிருபத்தை எபேசுவிலிருந்து கிபி. 90 ஆம் ஆண்டில் எழுதினார்.

ஆசிரியர்

யோவான்

மையக்கருத்து

உண்மையான ஊழியக்காரரையும், பொய்யான ஊழியக்காரரையும் பற்றிய விளக்கங்கள்.

புள்ளிவிவரங்கள்

அதிகாரம் - 1

வசனங்கள் - 14

கேள்விகள் - 2

பொருளடக்கம்

I. ஆசிரியரும் வாழ்த்துரையும் (1:1)

II. எல்லா பரிசுத்தவான்களைக் குறித்தும் தேவனுடைய சித்தம் (1:2)

III. காயுவு சத்தியத்தில் நடந்து கொள்வதற்காக சந்தோஷம் (1:3-4)

IV. ஊழியக்காரர்களை உபசரிக்க வேண்டும் (1:5-8)

V. தியோத்திரேப்பைக் குறித்து எச்சரிப்பு (1:9-10)

VI. பரிசுத்தவான்களையும் பாவிகளையும் தெரிந்து கொள்ளும் விதம் (1:11)

VII. தேமேத்திரியுவின் நற்சாட்சி (1:12)

VIII. முடிவுரையும் ஆசீர்வாதமும் (1:13-14)

III யோவான் - தொகுப்புரை

1 அதிகாரம்

I. ஆசிரியரும் வாழ்த்துரையும் - (அப் 19:29; 20:14; 1கொரி 1:14)

3யோவான் 1:1 மூப்பனாகிய நான் சத்தியத்தின்படி நேசிக்கிற பிரியமான காயுவுக்கு எழுதுகிறதாவது:

"மூப்பன்" **(elder)** - (2யோவான் 1:1)

"காயு" **(Gaius)** - இந்த காயு அப் 19:29; அப் 20:4; ரோமர் 16:23; 1கொரி 1:14 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறவரா அல்லது வேறொரு நபரா என்று தெளிவாகத் தெரியவில்லை.

II. எல்லா பரிசுத்தவான்களைக் குறித்தும் தேவனுடைய சித்தம்

3யோவான் 1:2 பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும் படி வேண்டுகிறேன்.

தேவனுக்குச் சித்தமான ஆசீர்வாதங்கள்

1. பொருளாதார ஆசீர்வாதம் **(Material prosperity)** (3யோவான் 2; யோசு 1:5-9; 1சாமு 2:7-8; 1இராஜா 2:3-4; 1நாளா 29:12; எஸ்றா 8:22; யோபு 36:11; சங் 1:1-3; மத் 7:7-11; மத் 17:20,மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 15:7,16; 2கொரி 9:6-8; பிலி 4:19)
2. சரீர சுகமாதலும், ஆரோக்கியமும் **(Physical healing and health)** (3யோவான் 2; யாத் 15:26; சங் 91; சங் 103:3; ஏசா 53:4-5; ஏசா 58:8; மத் 8:17; 1பேதுரு 2:24; யாக் 5:14)
3. ஆத்தும இரட்சிப்பு **(Soul salvation)** (3யோவான் 2; மத் 1:21; ரோமர் 1:16; ரோமர் 10:9-10; எபே 1:7; எபே 2:8-9; எபி 7:25; 1யோவான் 1:7,9; வெளி 1:5)

III. காயுவு சத்தியத்தில் நடந்து கொள்வதற்காக சந்தோஷம்

3யோவான் 1:3 சகோதரர் வந்து நீ சத்தியத்தில் நடந்துகொள்ளுகிறாய் என்று உன்னுடைய உண்மையைக் குறித்துச் சாட்சி கொடுத்தபோது மிகவும் சந்தோஷப்பட்டேன்.

3யோவான் 1:4 என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை.

"சகோதரர் வந்து...சாட்சி கொடுத்தபோது" - 3யோவான் 1:5-8 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற ஊழியக்காரர்களாக இருக்கலாம்.

"என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள்" - காயு யோவானுடைய ஊழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்டவன். "பிள்ளைகள்" என்னும் வார்த்தை யோவானுடைய பராமரிப்பின்கீழ் வளர்ந்து வரும் ஆவிக்குரிய பிள்ளைகளைக் குறிக்கும் வார்த்தையாக இருக்கலாம்.

IV. ஊழியக்காரர்களை உபசரிக்க வேண்டும்

3யோவான் 1:5 பிரியமானவனே, நீ சகோதரருக்கும் அந்நியருக்கும் செய்கிற யாவற்றையும் உண்மையாய்ச் செய்கிறாய்.

3யோவான் 1:6 அவர்கள் உன்னுடைய அன்பைக் குறித்துச் சபைக்கு முன்பாகச் சாட்சி சொன்னார்கள்; தேவனுக்கு முன்பாகப் பாத்திரமானபடி அவர்களை நீ வழிவிட்டனுப்பினால் நலமாயிருக்கும்.

3யோவான் 1:7 ஏனெனில் அவர்கள் புறஜாதியாரிடத்தில் ஒன்றும் வாங்காமல் அவருடைய நாமத்தினிமித்தம் புறப்பட்டுப்போனார்கள்.

3யோவான் 1:8 ஆகையால் நாம் சத்தியத்திற்கு உடன் வேலையாட்களாயிருக்கும்படி அப்படிப்பட்டவர்களைச் சேர்த்துக்கொள்ளக் கடனாளிகளாயிருக்கிறோம்.

III யோவான் - தொகுப்புரை

1 அதிகாரம்

"அவர்கள் உன்னுடைய அன்பைக் குறித்துச் சபைக்குமுன்பாகச் சாட்சி சொன்னார்கள்" - காயு பல ஊழியக்காரர்களை உபசரித்திருக்கிறார். அந்நியரையும் உபசரித்திருக்கிறார். பல தர்மக்காரியங்களையும் செய்திருக்கிறார். (3யோவான் 1:5-8).

"அவர்கள் புறஜாதியாரிடத்தில் ஒன்றும் வாங்காமல்" - இந்த ஊழியக்காரர்கள் தங்களுடைய சொந்த ஆதாயத்திற்காக இயேசு கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கிக்கவில்லை. வருமானத்தில் தங்களுக்கு ஆர்வமில்லை என்பதை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். (3யோவான் 1:7-8).

V. தியோத்திரேப்பைக் குறித்து எச்சரிப்பு

3யோவான் 1:9 நான் சபைக்கு எழுதினேன்; ஆனாலும் அவர்களில் முதன்மையாயிருக்க விரும்புகிற தியோத்திரேப்பு எங்களை ஏற்றுக்கொள்ளவில்லை.

3யோவான் 1:10 ஆனபடியால், நான் வந்தால், அவன் எங்களுக்கு விரோதமாய்ப் பொல்லாத வார்த்தைகளை அலப்பி, செய்துவருகிற கிரியைகளைநினைத்துக் கொள்வேன். அவன் இப்படிச் செய்துவருவதும் போதாமல், தான் சகோதரரை ஏற்றுக் கொள்ளாமலிருக்கிறதுமன்றி, ஏற்றுக் கொள்ள மனதாயிருக்கிறவர்களையும் தடைசெய்து, சபைக்குப் புறம்பே தள்ளுகிறான்.

"தியோத்திரேப்பு" (Diotrephes) - இவனைப் பற்றி சரியான விளக்கம் எதுவுமில்லை. இவன் ஒரு பெருமைக்காரன். பொல்லாத வார்த்தைகளை அலப்புகிறவன். அப்போஸ்தலருடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படியாமல், கலகம்பண்ணுகிறவன். (3யோவான் 1:9-10).

"அவன் எங்களுக்கு விரோதமாய்ப் பொல்லாத வார்த்தைகளை அலப்பி, செய்துவருகிற கிரியைகளை நினைத்துக் கொள்வேன்" - யோவானுக்கு அப்போஸ்தல அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பவுல் தன்னுடைய அப்போஸ்தல அதிகாரத்தைப் பயன்படுத்தி கொரிந்தியரைக் கடிந்து கொள்கிறார். (1கொரி 4:16-21).

யோவான் இந்த வசனத்திலும், வெளிப்படுத்தின விசேஷத்தில் சில வசனங்களிலும் தன்னுடைய அப்போஸ்தல அதிகாரத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்.

VI. பரிசுத்தவான்களையும் பாவிகளையும் தெரிந்து கொள்ளும் விதம் - (மத் 7:15)

3யோவான் 1:11 பிரியமானவனே, நீ தீமையானதைப் பின்பற்றாமல், நன்மையானதைப் பின்பற்று, நன்மை செய்கிறவன் தேவனால் உண்டாயிருக் கிறான்; தீமைசெய்கிறவன் தேவனைக் காணவில்லை.

"நன்மைசெய்கிறவன் தேவனால் உண்டாயிருக்கிறான்"- தீமை செய்கிறவனை விசுவாசிகள் பின்பற்றக் கூடாது. (3யோவான் 1:9-11). விசுவாசிகள் நன்மை செய்யும்போது அவர்கள் தேவனைக் காண்கிறார்கள்.

VII. தேமேத்திரியுவின் நற்சாட்சி

3யோவான் 1:12 தேமேத்திரியு எல்லாராலும் நற்சாட்சி பெற்றது மல்லாமல், சத்தியத்தாலும் நற்சாட்சி பெற்றவன்; நாங்களும் சாட்சி கொடுக்கிறோம், எங்கள் சாட்சி மெய்யென்று அறிவீர்கள்.

"தேமேத்திரியு" (Demetrius) - இந்த வசனத்தில் மட்டுமே இவனுடைய பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

VIII. முடிவுரையும் ஆசீர்வாதமும்

3யோவான் 1:13 எழுதவேண்டிய காரியங்கள் அநேகமுண்டு; ஆனால் மையினாலும் இறகினாலும் எழுத எனக்கு மனதில்லை.

3யோவான் 1:14 சீக்கிரமாய் உன்னைக் காணலாமென்று நம்பியிருக்கிறேன், அப்பொழுது முகமுகமாய்ப் பேசிக் கொள்ளுவோம். உனக்குச் சமாதானம் உண்டாவதாக. சிநேகிதர் உனக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள். சிநேகிதரைப் பேர்பேராக வாழ்த்துவாயாக.

"சீக்கிரமாய் உன்னைக் காணலாமென்று நம்பியிருக்கிறேன்" - 2யோவான், 3யோவான் ஆகிய இரண்டு நிருபங்களிலும் அப்போஸ்தலர் யோவான் இந்த நிருபங்களை யாருக்கு எழுதியிருக்கிறாரோ அவர்களைக் காணவேண்டுமென்றுவாஞ்சையாகஇருப்பதை வெளிப்படுத்தியிருக்கிறார். (2யோவான் 1:12).